# அச்சேற்றப்படாத ஈழத்துச் சுவடிகளை நூல்வடிவமாக்கல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

இலங்கையில் இதுவரை பல்வேறு ஒலைச்சுவடிக்கட்டுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன அந்த வகையில் இலங்கைக்கே உரித்தான தனித்துவமான ஓலைச்சுவடிக்கட்டுக்களை அடையாளம் கண்டு அவை தொடர்பான தகவல்கள் காலத்தால் அழியாமல் நூல் வடிவமாக்கி பாதுகாப்பதற்காக இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதுவரை இலங்கைக்கு உரித்தான பரராச சேகரம் , இருபாலை செட்டியார் வைத்தியம் , செகராச சேகரம் , அமுத சாகரம் ஆகிய ஓலைச்சுவடிக்கட்டுக்கள் நூல் வடிவங்களாக அச்சேற்றப்பட்டுள்ளன . இவற்றை போல் இலங்கைக்கே உரிய தனித்துவமான விடயங்களை கொண்ட ஓலைச்சுவடிக்கட்டுக்களை நூல்வடிவமாக்கி வெளியிடுதல் அவசியம்.

மேலும் தற்போது நூலக நிறுவனத்தின் மூலம் 'ஈழத்து ஓலைச்சுவடிகள் நூலகம் எனும் செயற்றிட்டத்தின் கீழும் பல்வேறு ஒலைச்சுவடிக் கட்டுகள் எண்ணிமப்படுத்தப்பட்டு

பாதுகாக்கப்பட்டுள்ளன. அவற்றிலும் தனித்துவமான சிவடிகளை இனங்கண்டு நூல்வடிவமாக்கல் வேண்டும்.

## செயற்றிட்ட நோக்கம்

ஒலைச்சுவடிகளை நூல்வடிவமாக்கல் மூலம் உலகெங்கிலும் அவை தொடர்பான அறிவினை கொண்டு சேர்ப்பதுடன் அவற்றை நூல் வடிவமாக்குவதன் முக்கியத்துவத்தையும் அறியச்செய்தல்

## செயற்றிட்ட காலவரையறை

இச் செயற்றிட்டமானது ஒரு வருட காலப்பகுதியைக் கொண்டுள்ளது. இக்காலப்பகுதிக்குள் அச்சேற்றப்படவேண்டிய ஓலைச்சுவடிகளை அடையாளங்கண்டு நூல்வடிவமாக்கி ஆவணப்படுத்தப்பட்டு இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பூரணப்படுத்தப்படும்

## எதிர்பாக்கப்படும் செலவீனம்

**LKR 4,657,574**

மேலதிக விபரங்களுக்கு
[https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132](https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132)